**SC.NO.79/2018** **Date: 25.09.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திருமதி.மருத்துவர்.பராசக்தி என்ற **Pw12** நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் **Tr.A.Pachaiyappan, Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் – மருத்துவர்.பராசக்தி

த/பெ, – பழனி

வயது – 37/2025

தொழில் – மருத்துவ இயக்குநர்

முதல் விசாரணை:

நான் தற்போது சென்னை ராஜீவ் காந்தி அரசு கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.05.2008 அன்று காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசியராக பணியில் இருந்த போது காஞ்சிபுரம் தாசில்தார் அவர்களிடமிருந்து குற்ற எண்.361/2008, சிவகாஞ்சி காவல் நிலையத்திற்குட்பட்ட 28 வயது மதிக்கத்தக்க குமரன் என்பவரின் ஏற்கனவே புதைக்கப்பட்ட உடலை எடுத்து பிரேத பரிசோதனை செய்வதற்கான விண்ணபத்தினை பெற்றேன். பின்பு எங்களது உயர் அதிகாரிகளிடம் உரிய அனுமதியை பெற்று நானும் எங்களது மருத்துவ குழுவும் அதே நாளில் பிற்பகல் 03.15 மணியளவில் புதைக்கப்பட்ட இடமான லாலா கார்டன் என்ற இடத்திற்கு சென்றடைந்தோம். தாசில்தார் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. புதைக்கப்பட்ட

இடம் 196 செ.மீ நீளத்திலும் 87 செ.மீ அகலத்திலும் 122 செ.மீ ஆழத்திலும் காணப்பட்டது. உடல் பாதியளவிற்கு எலும்பாக காணப்பட்டது. காயந்த திசுக்கள் மட்டும் எலும்பில் ஒட்டிக்கொண்டிருந்த நிலையில் இருந்தது. பற்கள் ஒவ்வொரு பகுதியிலும் 8 எண்ணிக்கையில் இருந்தது. கீழ்கண்ட இறப்பிற்கு முன்னால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன.

1. மூக்கு பகுதியில் சாய்வான வெட்டு காயம் 5x2 எலும்பு அளவு ஆழத்திற்கு முக்கு எலும்பில் வெட்டுக்காயம் இருந்தது.

2. இடது பக்க முன் தலையில் சாய்வான வெட்டு காயம் 5x2cm எலும்பு அளவு ஆழத்திற்கு காணப்பட்டது.

3. குறுக்கு வாட்டில் அமைந்த வெட்டுக்காயம் தலையின் நடுமண்டை பகுதியில் 6cm x2cm எலும்பு அளவு ஆழத்திற்கு எலும்பு வெட்டுப்பட்ட நிலையில் இருந்தது.

4. வலது பக்க பின் மண்டை பகுதியில் 5cm x 2cm எலும்பு அளவு ஆழத்திற்கான சாய்வான வெட்டு காயம் எலும்பு வெட்டுப்பட்ட நிலையில் காணப்பட்டது.

மேற்கூறிய 4 காயங்களின் ஓரங்கள் சீரான வெட்டுப்பட்ட நிலையில் காணப்பட்டது. மூளை பகுதி இல்லை. மற்ற உடல் உள்ளுறுப்புகள் எதுவும் இல்லை. தலையின் மண்டை ஓடு Super imposition பரிசோதனைக்கும், தொடை எலும்பு DNA பரிசோதனைக்கும் புதைக்கப்பட்ட பகுதியை சுற்றியுள்ள மண் Heavy Metallic poisoning பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கருத்து: மேற்கூறிய நான் பரிசோதனை செய்த அந்த நபர் பலதரப்பட்ட வெட்டுக்காயங்களினால் இறந்துள்ளார் என்றும் அவரது இறப்பு பிரேத பரிசோதனை செய்வதற்கு 7 மாதங்களுக்கு முன்பாக ஏற்பட்டிருக்க கூடும் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வழங்கியது தான். அது **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதே நாளில் அதே குற்ற எண்ணிற்கு உட்பட்ட காவல் நிலையத்திலிருந்து சுமார் 26 வயது மதிக்கத்தக்க மஞ்சுநாதன் என்ற ஏற்கனவே புதைக்கப்பட்ட உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்வதற்கான விண்ணப்பத்தினை பெற்று நானும் எங்களது மருத்துவ குழுவும் புதைக்கப்பட்ட இடமான காஞ்சிபுரம் லாலா கார்டன் என்ற இடத்திற்கு சென்றடைந்தோம். தாசில்தார் மற்றும் எங்களது முன்னிலையில் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. புதைக்கப்பட்ட இடம் 196 cm x 87 cm x 130cm அளவாகும். அவரது உடல் ஏற்கனவே புதைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட குமரன் என்பவரின் உடலுக்கு கீழே இருந்தது. அவரது உடலில் நீல கலர் ஜீன்ஸ், கோடு போட்ட சட்டை, பனியன் மற்றும் ஜட்டியுடன் காணப்பட்டது. உடல் பாதி அளவு எலும்பான நிலையில் காணப்பட்டது. உடலில் கீழ்கண்ட இறப்பிற்கு முன்னால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன.

1. சாய்வான வெட்டு காயம் வலது தோள்பட்டையில் 7cm x 3cm எலும்பு அளவு ஆழத்திற்கு காணப்பட்டது.

2. பின்பக்க temporal மற்றும் Occipital எலும்புகள் வெட்டுப்பட்டு தனியாக காணப்பட்டது. வெட்டுப்பட்ட இடம் சீரான ஓரங்களுடனும் அதை சுற்றியுள்ள பகுதிகள் கன்றிய நிலையிலும் காணப்பட்டது. மூளையின் பகுதி இல்லை. உடல் உள்ளுறுப்புகள் இல்லை. தலையின் மண்டை ஓடு ஓடு Super imposition பரிசோதனைக்கும், தொடை எலும்பு DNA பரிசோதனைக்கும் புதைக்கப்பட்ட பகுதியை சுற்றியுள்ள மண் Heavy Metallic poisoning பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கருத்து: மேற்குரிய நான் பிரேத பரிசோதனை செய்த நபர் வெட்டுக்காயங்களினால் இறந்துள்ளார் என்றும் அவரது இறப்பு பிரேத பரிசோதனை செய்வதற்கு 7 மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வழங்கியது தான். அது **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாசில்தார் என்னிடம் வழங்கிய விண்ணப்ப கடிதத்தை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அது எங்களுக்கு தான் கொடுக்கப்பட்டது, போலிசாரிடம் கொடுக்கவில்லை. அ.சா.ஆ.14ல் விண்ணப்பம் 03.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.14ல் பிரேதத்தை முதலில் பார்த்த நேரம் 03.15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கை நான் சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் மற்றும்

தாசில்தார் ஆகியோர் கொடுத்த வழக்கின் விவரத்தில் இறந்த நபரின் வயது குறிப்பிட்டதன் அடிப்படையில் தான் பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் வயது குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பினக்கூறாய்வு செய்ய சம்பவ இடத்திற்கு நாங்கள் செல்வதற்கு முன்பு அங்கே முன்னேற்பாடுகளை போலிசார் செய்து வைத்திருந்தார்களா என்றால் பிணம் இருந்த குழியை தோண்ட தயார் நிலையில் இருந்தார்கள்.

(மறு விசாரணை இல்லை)